**செய்தி வெளியீடு எண்: 377** **நாள் : 08.07.2014**

**<u>மாண்புமிகு தமிழக வனத்துறை அமைச்சர் அவர்களால் 08.07.2014 அன்று கிண்டி சிறுவர் பூங்காவில் பொதுமக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட உள்ள வன உயிரின விழிப்புணர்வு மையம் பற்றிய சிறு குறிப்பு</u>**

1958ம் ஆண்டு வனத்துறையின் வசம் ஒப்படைக்கப்பட்ட கிண்டி பார்க் ரிசர்வ் காடுகளின் ஒரு பகுதி அப்போதய பாரத பிரதமர் திரு. ஜவகர்லால் நேரு அவர்களின் விருப்பத்தின்படி 1959ம் ஆண்டு கிண்டி சிறுவர் பூங்காவாக துவக்கி வைக்கப்பட்டது. 8.8 எக்டர் பரப்பளவில் அமைந்துள்ள இச்சிறுவர் பூங்காவில் வெளிர்மான், புள்ளிமான், ஓநாய், நரி, முதலை, பாம்புகள், நீர்பறவைகள், வெளிநாட்டுப்பறவைகள் உள்ளடக்கிய 55 வகையான 490 விலங்குகள் மற்றும் பறவைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் சுமார் 10 லட்சம் குழந்தைகள் மற்றும் பார்வையாளர்கள் இச்சிறுவர் பூங்காவினை கண்டு கழித்து வருகின்றார்கள்.

03.12.2004 அன்று தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு வன உயிரியல் பூங்கா ஆணையம் 06.03.2013 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை தலைவராக கொண்டு மேம்படுத்தப்பட்ட நிர்வாகத்திற்காக மறுசீரமைக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் முதன்முதலாக 28.05.2013 அன்று நடைபெற்ற 18வது நிர்வாக குழு கூட்டத்தில் ரூ.70 லட்சம் மதிப்பீட்டில் கிண்டி சிறுவர் பூங்காவில் வன உயிரின விழிப்புணர்வு மையம் மற்றும் விழிப்புணர்வு வசதிகள் செய்திட ஒப்புதலளிக்கப்பட்டது. இதனடிப்படையில் கடந்தாண்டு ரூ.45.60 லட்சம் மதிப்பீட்டில் வன உயிரின விழிப்புணர்வு மையம் அமைக்கப்பட்டு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வன உயிரின விழிப்புணர்வு மையத்தில் வெப்ப மண்டல இலையுதிர் மற்றும் இலையுதிரா காடுகளின் மாதிரி அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் யானை, காட்டெருமை, சருகுமான், கரடி, சிறுத்தை, வெளிர்மான், வரையாடு, நீலகிரி மார்ட்டின், புனுகு பூனை, இருவாச்சி பறவை, பாரடைஸ் ∴பிளைகாட்சர், காட்டுக்கோழி, மரகதப்புறா, கோல்டன் ஓரியோல், மீன்கொத்தி பறவை, மரங்கொத்தி பறவை, பாம்பு, தவளை, வண்ணத்துபூச்சிகள், பச்சோந்தி, தேள், மரக்காளான்கள் முதலிய 58 வகையான காட்டு மிருகங்கள், பறவைகள், ஊர்வன முதலியவற்றின் மாதிரிகள் அமைக்கப்பட்டுள்ளது. ஒளி மற்றும் ஒலி, குளிர்சாதன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இம்மையத்தில் ஒவ்வொரு வன உயிரினத்திற்கும் ∴போகஸ் லைட் மூலம் ஒளிரூட்டப்பட்டு அவற்றைப் பற்றிய சிறு குறிப்பு ஆங்கிலம் மற்றும் தமிழில் குரல் வடிவில் ஒலிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

கிண்டி சிறுவர் பூங்காவிற்கு வருகை புரியும் குழந்தைகள் மற்றும் அனைத்து பார்வையாளர்களின் மனதை கவரும் வகையில் இயற்கை விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் இம்மையம் அமைந்துள்ளது. ஒவ்வொரு நாளும் ஒரு காட்சிக்கு 25 நபர் வீதம் காலை மற்றும் மாலையில் தலா இரண்டு காட்சிகள் ஆக மொத்தம் ஒரு நாளுக்கு நான்கு காட்சிகள் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் அமைக்கப்பட்டுள்ள வனங்களில் ஒன்றோடொன்று இயைந்து வாழ்ந்து வரும் தாவரங்கள் மற்றும் வன விலங்குகளின் மாதிரிகள் பார்வையாளர்களை இயற்கையோடு ஒன்றுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இன்று (08.07.2014) மாண்புமிகு தமிழக வனத்துறை அமைச்சர் திரு.எம்.எஸ்.எம்.ஆனந்தன், அவர்கள் இந்த வன உயிரின விழிப்புணர்வு மையத்தினை இனிதே திறந்து வைத்தார்கள். திரு.ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.அ.ப., முதன்மை செயலர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, திரு.வினோத்குமார் இ.வ.ப., முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறை தலைவர், திரு.லட்சுமி நாராயண், இ.வ.ப., முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளர், திரு.கே.எஸ்.எஸ்.வி.பி.ரெட்டி, இ.வ.ப., கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் இயக்குநர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர், திருமதி.கெள.கீதாஞ்சலி, இ.வ.ப., வன உயிரின காப்பாளர், சென்னை உடனிருந்தனர். மேலும் இந்நிகழ்ச்சியில் அனைத்து தலைமையிட முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்கள், கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்கள், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்கள் மற்றும் வனப்பாதுகாவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பின்னர் கிண்டி தேசிய பூங்காவில் 950 மீட்டர் நீளத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள வெளிமான் இயற்கை வழித்தடத்தில் ஆதரவற்ற பள்ளி மாணவ, மாணவியர் பங்கு பெற்ற இயற்கை நடைப்பயணத்தினை (Nature Walk) மாண்புமிகு தமிழக வனத்துறை அமைச்சர் அவர்கள் கொடியசைத்து இனிதே துவக்கி வைத்தார். 270.51 எக்டர் பரப்பளவில் சென்னை மாநகரினிடையே அமைந்துள்ள கிண்டி தேசிய பூங்காவில் இயற்கை ஆர்வலர்கள் மற்றும் மாணவர்களிடையே காடுகள் மற்றும் விலங்குகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தோடு அமைக்கப்பட்டுள்ள புள்ளிமான் இயற்கை வழித்தடம், வெளிமான் இயற்கை வழித்தடம், நரி இயற்கை வழித்தடம் மற்றும் எறும்புத்திண்ணி இயற்கை வழித்தடம் ஆகிய நான்கு இயற்கை வழித்தடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வன உயிரின காப்பாளர்,
சென்னை

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**